Kongu Chettiar text "H" Version

தேங்கு செந்தமிழ்க்கிச்சை செய் ஐயனே
செல்வனே செல்வக் கருப்பண்ண ராயனே.

## இரத்தின மூர்த்தி, கட்டளைக் கவித்துரை.

இட்ட பொட்டும் இளம்பிறைச் சுட்டியும் இந்திரவர்ண
வடமுத்துக் கோவையும் நின்மணிக் கொள்கையும்
கண்டு நெஞ்சம் கலங்குது காணையா.
தூட்டமான கர்நாடர் மராடரை துரத்தியே
படை நடத்திய சுந்தரா.
செட்டி ஆபதி கொற்கையில் மன்னவா செல்வனே
செல்வரத்ன சிங்காரனே

## பங்களத்துப்பாட்டு.

### நாட்டுச்சிறப்பு.

1. அண்ணே, நீங்க போருக்கோ வேளாளன். என் கொற்றவரி மணிமார்பா. நம்முடை ஆலத்தூர் பட்டணம் அழகு பொன்னி வளநாடு சீமையிலே அண்ணந்தம்பி இருவரெண்டு பேருமேதான் போருக்கோ வில் விஜயன்.

2. அண்ணே, நீங்க வார்த்தைக்கோ வேளாளன் என் முடி பொருந்த காராளா. நம்முடை சீமையிலே அண்ணந்தம்பி யிருவரெண்டு பேருமேதான் அங்கிவரும் வழக்குக்கோ தர்மலிங்கம்.

3. அண்ணருட வார்த்தை தவருது. என் ஆணழகன் ஆணழகா தார் வேந்தா. நம்மளுட ஆலத்தூர் பட்டணம் அழகு பொன்னிவளநாடு சீமையிலே உங்கள் இருவரெண்டு பேருடைய வாசகமோ பொய்யாது.

4, அண்ணருட நீதி தவருது. பேரும் பெரிய புகழ் பெரிய காராளா. நம்மளுட ஆலத்தூர் பட்டணம் அழகு பொன்னி வளநாடு சீமையிலே என்பிறந்த அண்ணரிருவரெண்டு பேருடைய நிச்சயமோ பொய்யாது.

5, அண்ணு. உங்களுட சொல்லுத்தவருது. என் சின்னண்ணு காராளா. நம்மளுடைய வைய பொன்னிவளநாடு சீமையிலே உங்களுட சொல் வார்த்தை தப்பாது.

6, அண்ணு, அங்கே மாருகும்மாரியது. பேரும் புகழ் பெரிய காராளா. நம்மளு சித்தாலப்பட்டணத்தே, உங்களுட நாளிலே அங்கு வரிசையாய்த்தான் பொழியும்.

7. அண்ணு, நீங்க காலால் மடை திறந்தால் என்பிற பொருந்த காராளா. நம்மளுட ஆலத்தூர் பட்டணம் அழகு பொன்னி வளநாடு சீமையிலே அங்கு காதவழி நீர் பாயும்.

8, அண்ணு, நீங்க விரலால் மடை திறந்தால் என் சின்னண்ணு. காராளா. நம்மளுட சித்தாலப்பட்டணம் செம்பொன்னி வளநாடு சீமையிலே அங்கே வெகுதூரம் நீர் பாயும்.

9, அண்ணா, நீங்க சேற்றுல் மடை திறந்தால் என் கனக ரத்ன முடிவேந்தா
நம்மளுடைய கல்கை பொன்னி வளநாடு சீமையிலே
நம்மளுடைய நாளையிலே அங்க சிலதூரம் நீர் பாயும்

10, அண்ணா, அங்கே நீர் பாஞ்சா நெல் விளையும்
என் முடி பொருத்த காராளா. நம்மளுட ஆலத்தூர் பட்டணம்
அழகு பொன்னி வளநாடு சீமையிலே நம்மளுட நாளையிலே
அங்கே நெற்சம்பா போரேறும்.

11, அண்ணா, அங்கே ஆணைகட்டித்தூர் விளையும்.
என் கனக ரத்ன முடிவேந்தா. நம்மளுட சித்தாலப்பட்டணம்
செம்ப பொன்னி வளநாடு சீமையிலே நம்மளுட நாளையிலே
அங்கே வாண ஓட்டப் போரேறும்.

12, அண்ணா, அங்கே கட்டுக் கலங்காணும். என் கனக ரத்ன
முடி வேந்தா. நம்மளுட ஆலத்தூர் பட்டணம் அழகு
பொன்னி வளநாடு சீமையிலே நம்மளுட நாளையிலே
கதிருழக்கு நெற்காணும்.

13, அண்ணா, வாழைப்பழுக்கும். என் சின்னண்ணா காராளா.
நம்மளுட வைய பொன்னி வளநாடு சீமையிலே நம்மளுட
நாளையிலே அங்கே வளவெல்லாம் தேன் கொழிக்கும்.

14, அண்ணா, தென்னை பழுக்கும் என் மகுட முடிக்காராளா.
நம்மளுட சித்தாலப்பட்டணம் செம்ப பொன்னி வளநாடு
சீமையிலே நம்மளுட நாளையிலே தெருவெல்லாம்
தேன் கொழிக்கும்.

15, அண்ணா, நீங்க குதிரைமேல் ஏறியல்லோ என்னுடை
ரத்ன முடிவேந்தா. நம்மளுடை வைய பொன்னிவளநாடு-
சீமையிலே அண்ணரிருவரெண்டு பேருமேதான்
அங்கு சடைசாமல் தான் வருவீர்.

16, அண்ணா, நீங்க ஆனைமேல் ஏரியல்லோ போனார் பெரிய
புகள் பெரிய காராளா. நம்மளுடை ஆலத்தூர் பட்டணம்
அழகு பொன்னிவளநாடு சீமையிலே அண்ணரிருவரெண்
டு பேருமேதான் அங்கு அஞ்சாமல் தான் வருவீர்.

17, அண்ணா, நீங்க வெள்ளைன பீதேறி ஆணூலழகன்
ஆணழகா, தார் வேந்தா. நம்மளுடை சித்தால பட்டணத்தே
அண்ணரிருவரெண்டு பேருமேதான்
அங்கே வீதியிலே தான் வருவீர்.

18, அண்ணருடை கொடிமேல் கிளி பறக்கும். அடஎன் தம்பி
குமாரசங்கா. நம்மளுடை ஆலத்தூர்ப்பட்டணம் அழகு
பொன்னிவளநாடு சீமையிலே என்பிறந்த அண்ணருடை
கொடிமன்னர் கூடாரம்.

19, அங்கே பச்சைக்கிளி பறக்கும். என்கை ரத்ன முடிவேந்தா.
நம்மளுடை சித்தாலப்பட்டணம் செம்ப பொன்னிவளநாடு
சீமையிலே என்பிறந்த அண்ணருடை,
படைமன்னர் கூடாரம்.

20. அங்கே முத்துக்கொடி பறக்கும். என் ஆணூலழகன்
ஆணழகா தார்வேந்தா. நம்மளுடை வைய பொன்னி
வளநாடு சீமையிலே என்பிறந்த அண்ணருடை
முடிமன்னர் கூடாரம்.

21. அண்ணா, நீங்க நடந்தால் மனுக்கடும் என் கனக-
ரத்ன முடிவேந்தா. நம்முடை கங்கை பொன்னிவள நாடு
சீமையிலே அண்ணாதம்பி இருவரெண்டு பேருமே தான்
அங்கே நடந்து நின்றால் சிறைக் கடும்

22. அண்ணா, நீங்கள் பார்த்தால் மனுக்கடும். என் முடி
பொருந்த காரளா. நம்முடை சித்தாலப்பட்டணத்தே
அண்ணாதம்பி யிருவரெண்டு பேருமே தான்
அங்கு பயண மென்றால் சனைங்கடும்

23. அண்ணா நீங்கள் இருந்தால் மனுக்கடும் என் தம்பி
குமார சுங்கா. கங்கை பொன்னிவளநாடு சீமையிலே
நீங்களிருவரெண்டு பேருமே தான் அங்கு
எழுந்திருந்தால் சிறைக்கடும்.

24. அண்ணா. நீங்க கத்தி சுழட்டிவிட்டால் என் கோடையிடி
த் தாரளா. கங்கை பொன்னிவள நாடு சீமையிலே
அங்கு, உங்களைக் ~~[illegible]~~ கடுத்த படை பின் தாங்கும்.

25. அண்ணா, நீங்க ஈட்டி சுழட்டி விட்டால் என் பொறுமை
பொருந்த போர்க்களத்து வீர காமா. நம்முடை ஆலத்தூர்ப்-
பட்டணம் அழகு பொன்னிவளநாடு சீமையிலே
அண்ணா எதிர்த்த படை பின் தாங்கும்

26. அண்ணா, நீங்க அம்பு கட்டி வாளெடுத்தால் என்னுடன்
பிறந்த இளையது தார் வேந்தா. கங்கை பொன்னிவளநாடு
சீமையிலே நீங்களிருவரெண்டு பேருமே தான்
அங்கு எதிர்த்தாள சங்கரிப்பீர்.

27. அண்ணை, நீங்க கனக முடியசைத்தால் என் பொறுமை பொருந்த போர்க்களத்து வீரகாமா. நம்மளுட நாளியிலே அந்தக் கங்கைவள நாடதிரும்.

28. அண்ணை, நீங்க செம்பொன் முடியசைத்தால் என் ஆணைவழகன் ஆணைகா தார் வேந்தா நம்மளுட செம்பவள நாட்டிலேதான். உங்களுட நாளியிலே அங்கு தேசமெல்லாம் தானதிரும்.

29, அண்ணை, நீங்க முத்து முடியசைத்தால் என் கனகரத்ன முடி வேந்தா. நம்மளுட கங்கை பொன்னிவளநாடு சீமையிலே உங்களுட நாளியிலே அங்கு முச்சூடும் தானதிரும்.

30, அண்ணை, நீங்கள் தங்க முடியசைத்தால் என் பேராழ் பெரிய புகழ் பெரிய தார் வேந்தா. நம்மளுட சித்தூலப்பட்டணம் செம்ப பொன்னிவள நாடு சீமை முதல் உங்களுட நாளியிலே இந்த தரணியெல்லாமதிரும்.

31. அண்ணை, நீங்கள் வெள்ளிகட்டும் வேலெடுத்தால் என் மகுட முடிக்காரராளா. நம்மளுட ~~நாளியி~~லே கங்கைபொன்னி வளநாடு சீமையது உங்களுட நாளியிலே வேரோட தானதிரும்.

## சண்டை செல்லுதல்

32, அண்ணை, நீங்கள் வெள்ளிகட்டும் பரிசை கொண்டு என் சிங்கத்தை வெட்டிப் பிளக்கும் சிறுபுலித் தார் வேந்தா. நம்மளுட ஆனைத்தூர் பட்டணம் அழகு பொன்னிவளநாடு சீமை விட்டு அண்ணாரிருவ ரெண்டு பேருமேதான் அங்கு ஒரு வெட்டுவன் மேல் சண்டை முகம்.

33, அண்ணா, நீங்க கத்திகட்டும் பரிசை கொண்டு என்
பணப்பிடங்கி வில்லேந்தும் பாரச்சீல வீரா மா.
நம்முடைய வையப் பொன்னிவளநாடு சீமை விட்டு
அண்ணாந்தம்பி இருவரெண்டு பேருமேதான் அங்கு
ஒரு காவலன் மேல் சண்டை முகம்.

34, அண்ணா, நீங்க செம்பரிசை கொண்டல்லவோ. என் தம்பி
குமார சங்கா. தங்கை பொன்னிவளநாடு சீமை விட்டு
அண்ணாந்தம்பி இருவரெண்டு பேருமேதான்
அங்கு ஒரு சேவகன் மேல் சண்டை முகம்

35, அண்ணா, நீங்கள் சண்டை முகம் போனவற்கே.
என்னோடுடன் பிறந்த இளவயது காராளா
பொல்லாத வேட்டுவனார் சீமையிலே அண்ணனுந்தம்பி
இருவரெண்டு பேருக்குமேதான் அங்கு
ஒரு சதிகள் வந்து நேர்ந்ததென்ன?

36, அண்ணா, நீங்கள் வேட்டை முகம் போனவர்க்கே என்
பொறுமை பொருந்த போர்க்களத்து வீரா மா.
பொல்லாத வேட்டுவனார் சீமையிலே அண்ணர் இருவ-
ரெண்டு பேருக்குமேதான் ஒரு வினைகள் வந்து நேர்ந்ததென்ன?

37, அண்ணா, நீங்கள் ஆனைமேல் போனவர்க்கே அட என் தம்பி
குமார சங்கா, பொல்லாத வேட்டுவனார் எல்லையிலே
உங்களிருவரெண்டு பேர்க்குமேதான்
ஒரு அவகேடு நேர்ந்ததென்ன.

38, அண்ணா, நீங்க குதிரைமேல் போனவற்கே என்
பண்பிரெங்கி வில்லேந்தும் பாரச்சிறு வீகாமா.
பெல்லாத வேட்டுவனார் சீமையிலே என் பிறந்த
அண்ணருக்கே அங்கு ஒரு குறிகேடு நேர்ந்ததென்ன?

## தங்கை கனவு கண்டு, எழுந்து புலம்பல்.

39, அண்ணா, நம்மளுட கல்லான கோட்டையது என்
ஆணழகன் ஆணழகா தார்வேந்தா. நம்மளுட
வைய பொன்னிவளநாடு சீமையிலே நான் உத்தமியும்
பெண்ணாளும், நம்மளுட நாளையிலே அது
தலையாது என்றிருந்தேன்

40, அண்ணா, அங்கே கிலைய மழை பொழிய என்
பொறுமை பொருந்த போர்க்களத்து வீகாமா.
நான் தங்காள் பிறவியாரும் இப்போ அது
கலைந்து விழக் கண்டேன் கனா.

41, அண்ணா, நம்மளுட இரும்பான கோட்டையது. என்
சிங்கத்தை வெட்டிப்பிளக்கும் சிறு புலித் தார்வேந்தா.
உன்னோடன் பிறந்த உடைதாரித் தங்கையரும் நம்மளுட
ஆலந்தூர் பட்டணத்தே அது இடியாது என்றிருந்தேன்.

42, அண்ணா. அங்கே இடிய மழை பொழிய. என்கையை ரத்தன முடி
வேந்தா. நம்மளுட சித்தாலப் பட்டணம் செம்பொன்னி
வளநாடு சீமையிலே நான் தங்காள் பிறவியரும்
நம்மளுட நாளையிலே அது இடிந்து விழக் கண்டேன் கனா.

43, அண்ணு, நம்மளுட செங்கல்லால் கோட்டையது. என்
மகுட முடிக்காரனா. நம்மளுட கங்கை பொன்னிவளநாடு
சீமையிலே நான் பத்தினியும் பெண்ணுளும்
நம்மளுட நாளையிலே அது இருந்து வீழ்ந்திருந்தேன்.

44, அண்ணு, அங்கே இதோ மழை பொழிய. என் ஆணுலழகன்
ஆணழகா தார்வேந்தா. இத்தாலப்பட்டணத்தே நான்
உன்னோடுடன் பிறந்த உத்தமியும் பெண்ணுளும்
நம்மளுட நாளையிலே அது சிதைந்து விழக்கண்டேன் கணு.

45, அண்ணு, நம்மளுட குலை சாய்ந்த தென்னைமரம். என்
பிணைப்பிடுங்கி வில்வேந்தும் பார்ச்சிலே வீகாமா. நான்
பருவதா பத்தினியும் நம்மளுடு சீமையிலே. இப்போ
அங்கே குருத் தொடிந்து விழக்கண்டேன்.

46, அண்ணு, நம்மளுட முற்றத்துப் பொன் முருங்கைமரம்
என் கொற்றவரி மணிமார்பா. நான் வெள்ளாங் குமாரத்தியும்
நம்மளுட ஆலத்தூர் பட்டணத்தே இப்போ அங்கே
முறிந்து விழக்கண்டேன் கணு

PS 105

47, அண்ணு நம்மளுட ஆனைகட்டுங் கொட்டாரம். என்
பிணைப்பிடுங்கி வில்வேந்தும் பார்ச்சிலே வீகாமா.
நம்மளுட வைய பொன்னிவளநாடு சீமையிலே
இப்போ அங்கே அருகோ முளைக்கக் கண்டேன்.

48, அண்ணு, நம்மளுட குதிரைகட்டும் கொட்டாரம். என் சிங்கத்தை
வெட்டிப்பிளக்கும் சீதுபுலித்தார் வேந்தா. நம்மளுட
ஆலத்தூர்ப் பட்டணம் அழகு பொன்னி வளநாடு சீமையிலே
இப்போ அங்கே கோரை முளைக்கக் கண்டேன்.

49, அண்ணே, உங்களுட கத்தூவைக்கும் மீலையிலே என் கைகோத்ன முடிவெந்தா. நான் உன்னோடுடன் பிறந்த உத்தமியும் தங்கை நல்லாள். நம்மளுட நாளியிலே அங்கே கருக்குருவி நாடக் கண்டேன்.

50, அண்ணே, உங்களுட ?ட்டுவைக்கும் மீலையிலே என் பொறுமை பொருந்த போர்க்களந்து வீகாமா. நம்மளுட சித்தாலப்பட்டணம் செம்ப பொன்னி வளநாடு சீமையிலே இப்போ அங்கே இருளுவந்து மூடக் கண்டேன்

51, அண்ணே, நம்மளுட தலை வாசல் உறை கிணறு

PS 105

என் சிவ சிவா கர்த்தாவே. நம்மளுட கங்கை பொன்னி வளநாடு சீமையிலே, நான் பத்தினியும் பெண்ணாளும் இப்போ அது சரிந்து விழக் கண்டேன் கனா.

52. அண்ணே, நம்மளுட பட்டத்து வெள்ளானை. என்னோடுடன் பிறந்த இளவயது காரானா. நான் உன்னோடுடன் பிறந்த உளதாரித் தங்கையரும்! நம்மளுட சீமையிலே இப்போ அது பரிபோகக் கண்டேன் கனா.

53 - அண்ணே, நம்மளுட கொப்பத்து வெள்ளானை என் பணைப்பிடுங்கி வில்லேந்தும் பாஞ்சில் வீகாமா. என் பொறுமை பொருந்த போர்க்களந்து வீகாமா. நம்மளுட நாளியிலே அது கொம்போ முறியக்கண்டேன்.

## IX, தங்கை தூங்கி எழுந்து பரிதவித்தல்

54, அண்ணா, நீங்கள் விணைகாரன் எல்லைக்கே என்னோடுடன்
பிறந்த இளவயது காளையா. நம்மளுடைய வையம் பொன்னி
வளநாடு சீமை விட்டு அண்ணனும் தம்பி இருவரெண்டு
பேருமே தான் அங்கு வேட்டை முகம் போனீர்களே.

55, அண்ணா, நீங்கள் வேட்டை முகம் போனவற்கே
என் பொறுமை பொருந்த போர்க்களத்து வீகாமா.
பொல்லாத வேட்டுவனார் சீமையிலே என் பிறந்த
அண்ணரிருவரெண்டு பேருக்குமேதான் அங்கு ஒரு
விணைகள் வந்து நேர்ந்ததென்ன?

56, அண்ணா, நீங்கள் சதிகாரன் எல்லைக்கே என்
சிங்கத்தை வெட்டிப் பிளக்கும் சிறுபுலி தார்வேந்தா.
நம்மளுட ஆலத்தூர் பட்டணம் அழகு பொன்னிவளநாடு
சீமை விட்டு, அண்ணனும் தம்பியும் இருவரெண்டு பேருமே-
தான் அங்கு சண்டை முகம் போனீர்களே.

57. அண்ணா, நீங்கள் சண்டை முகம் போனவற்கே என்
தம்பி சோமசங்கா, பொல்லாத வேட்டுவனார் சீமையிலே
என் பிறந்த அண்ணரிருவரெண்டு பேருக்குமேதான்
அங்கு ஒரு சதிகள் வந்து நேர்ந்ததென்ன?

58. அண்ணனைக் கள்ளன் சதித்தானே. என்கனக ரத்ன
முடிவேந்தா. பொல்லாத வேட்டுவனார் சீமையிலே
உங்களிருவரெண்டு பேரையுமே அங்கு
ஒரு காற்புருவனெய்தானே.

59. அண்ணரை வேடன் சதித்தானோ? என் பொறுமை
பொருத்த போர்க்களத்து வீகாமா. பொல்லாத
வேட்டுவனூர் சீமையிலே அண்ணரிரு வெண்டு பேரையுந்-
தான் அங்கு விற் புருவனெய்தானோ?

60, அண்ணரைச் சாதிலிங்க அம்புகொண்டு பனைப் பிடுங்கி
வில்லேந்தும் பார்ச்சிறு வீகாமா. அடஎன் தம்பி குமாரசங்கா
உங்கள் இருவரெண்டு பேரையுமே அந்தத் தலையனூர் காளி
மகன் தலையறவே எய்தானோ?

61, அண்ணரை குறிச்சிகட்டும் அம்பு கொண்டு என் மகுட
முடிக்காரளா. பொல்லாத வேட்டுவனூர் சீமையிலே
அண்ணந்தம்பி இருவரெண்டு பேரையுந்தான் கூட்டவூரக்
காளிமகன் திருக்காலே எய்தானோ?

## தங்கை அண்ணன்மார் இருவரையும் தேடிப் போதல்

62, தந்தச் சிறப்புக் கொண்டு என் பேராற் பெரிய புகழ்பெறிய
தார் வேந்தா. நம்மளுட வைய பொன்னிவளநாடு சீமையிலே
என் பிறந்த அண்ணருட சாவடியிற் கூட்டமுண்டு.

63, அண்ணு, உங்களுட சாவடி வாசலிலே என் பொறுமை
பொருத்த போர்க்களத்து வீகாமா. நம்மளுட ஆலந்
தூர் பட்டணம் அழகு பொன்னிவளநாடு சீமையிலே
உங்களுட நாளியிலே அங்கு ஜனமோ திரண்டிருக்கும்.

64, அண்ணு, நம்மளுட ஜனந்திரண்ட சாவடியே என்
கனகரத்ன முடிவேந்தா. நான் உன்னோடுடன் பிறந்த
உத்தமியும் பெண்ணுளும் உங்களிருவரையும் காணாமல்

14.A. அன்று நம்முடைய குரு. பொன்னு. என்னை ராஜா
நம்முடைய கிக்காப்பட்டணம் சூப்ப சொன்னவாறு கிடைக்க
உங்களுடைய நாமெயரே ஆசை ஒரு ஆசை சொன்னி வாராளே.

14.B. அன்று நம்முடைய ஆசிக்கிவாரார். என் தெய்வமாயிட்டனே.
நம்முடைய குருத்துப்பட்டணம் அழகு சொன்னேன்.
பட்டபா. நம்முடைய நாமெயரே அதுதான்க்கராட்ட
உனாள கிடைக்க உங்களுடைய காலமா
சொல் கிடைக்க

14.C. அன்று நம்முடைய தெரிக்கிவாராள். என் சின்னஞ்சு உங்களுடைய
நம்முடைய வைய சொன்னேனாம் கிடைக்க
நாமயரே அது கோட்டைகளம் சொல் கிடை.

என்பிறந்த தந்திரிமார் எங்கே என்றேன்.

65. அண்ணா உங்களுக்கு கொற்றை சிறப்புமுண்டு என்
முடி பொருத்த காராளா. நம்மளுட சித்தாலப்பட்டணம்
செம்ப பொன்னிவள நாடு சீமையிலே என் பிறந்த
அண்ணரிருவரெண்டு பெருமைய கோபுரத்தே கூட்டமுண்டு.

66, அண்ணா, உங்களுட கோபுர வாசலிலே, என் கனக
ரத்ன முடி வேந்தா. நம்மளுட வைய பொன்னி வளநாடு
சீமையிலே. நம்மளுட நாளையிலே அங்கே
கொலுவோ திரண்டிருக்கும்.

67, அண்ணா, நம்மளுட கொலு திறண்ட சாவடியே. என்-
னோடுடன் பிறந்த இளைய காராளா. நான் உன்னோடுடன்
பிறந்த உத்தமியும் பெண்ணாளும் உங்களிருவரையும்
காணாமல், என்பிறந்த கொற்றவனார் எங்கே என்றேன்.

68, அண்ணா, உங்களுக்கு மந்தை சிறப்புமுண்டு. என்
சிங்கத்தை வெட்டிப்பிளக்கும் சிறுபுலி தார் வேந்தா.
நம்மளுட கங்கை பொன்னி வளநாடு சீமையிலே.
என் பிறந்த அண்ணருட மாளிகையில் கூட்டமுண்டு.

69, அண்ணா, உங்களுட மாளிகை வாசலிலே என்
பொறுமை பொருந்த போர்களத்து வீரா மா.
நம்மளுட ஆலத்தூர்ப்பட்டணம் அழகு பொன்னி
வளநாடு சீமையிலே உங்களுட நாளையிலே
அங்கே மகுவோ திரண்டிருக்கும்.

70. அண்ணு, உங்களுட மனுத்திரண்ட சாவடியே. என் பொறுமை பொருந்த போர்க்களத்து வீகாமா. நான் உன்னோடுடன் பிறந்த உத்தமியும் பெண்ணும் உங்கள் இருவரையும் காணாமல் இப்போ என் பிறந்த மந்திரிமார் எங்கே என்றேன்.

71. அண்ணு, நான் தாமரையாளென்று சொல்லி என் சிவ சிவா கர்த்தாவே. நான் உன்னோடுடன் பிறந்த உஷதாரித் தங்கையரும். நம்முட நாட்டிலேதான் என்னைப் பெற்ற தாய் பேரா கேட்டதுண்டு.

72. அண்ணு, நான் குன்றுடையான் என்று சொல்லி ஐயா வமைம் போன பாதகரே. நம்முட வைய பொன்னிவள நாடு சீமையிலே உங்களுட நாளையிலே நான் தங்காள் பிறவியரும் என்னைப் பெற்ற கொற்றவன் பேர் கேட்டிருப்பேன்.

73, அண்ணு, நான் ஒக்கப்பிறந்ததுண்டு. பொல்லாதவமை போன பாதகரே. நான் பெண்ணுள் தனியொருத்தி பேடை மயிலன்னம் பெண் பெருமாள் தேவியரும் உங்களுடன் ஒரு முளைப்பாயுண்டாரியேன்.

74, அண்ணு, நான் கூடப்பிறந்ததுண்டு. என் பொறுமை பொருந்த போர்க்களத்து வீகாமா. நம்முட வைய பொன்னிவள நாடு சீமையிலே நான் பத்தினியும் பெண்ணும் உங்களுடன் கூட்டுப்பால் உண்டாரியேன்.

75. அண்ணை, நான் பாலோ குடித்ததுண்டு. என் சின்னண்ணை
நார் வேந்தா. நம்மளுட சித்தாலப்பட்டிணம் செம்பொன்னி-
வளநாடு சீமையிலே. நான் ஊதாரித் தங்கையரும்
உங்களுட படைத்தகளமோ கண்டறியேன்.

76, அண்ணை, நான் மோரோ குடித்ததுண்டு. என் பனைப்பிடுங்கி-
வில் வேந்தும் பார்ச் சிறு வீகாமா. நான் பருவதா பத்தினியும்
நம்மளுட நாட்டிலேதான் உங்களுட மூளைத் தளமோ கண்டறியேன்.

77, அண்ணை, நான் ஆவோ முடித்ததுண்டு. என் மகுட சிமக்-
காரனா. நான் நம்மளுட சித்தாலப்பட்டிணத்தே, நான்
தங்காள் பிறவியரும் உங்களுட நாளையிலே
அங்கு ஒரு பூமலரும் கொம்பறியேன்.

78, அண்ணை, நான் கனியோ புசித்ததுண்டு. என் சின்னண்ணை
என் பிறவி நான் வெள்ளாங் குமாரத்தியும் நம்மளுட
ஆலத்தூர் பட்டணத்தே உங்களுட நாளையிலே
அங்கு ஒரு காய் காய்க்கும் கொம்பறியேன்.

79. அண்ணை, நான் அம்பி கடந்தறியேன். என்னுடன்
பிறந்த இளவயது காரனா.. நம்மளுட கங்கை பொன்னி-
வளநாடு சீமையிலே நான் உத்தமியும் பெண்ணுளும்
உங்களுட நாளையிலே நான் அயல் தெருவே
போயறியேன்.

80, அண்ணை, நான் குப்பை கடந்தறியேன். என் பொறுமை
பொருத்த போர்க்களத்து வீகாமா. நான் வெள்ளாங்-
குமாரத்தியும் நம்மளுட கங்கை பொன்னி வளநாடு
சீமையிலே உங்களுட நாளையிலே நான் ஒரு குயத்
தெருவே கண்டறியேன்.

81, அண்ணா, நான் வீடு கடந்தறியேன் என் கனக ரத்ன முடி வேந்தா. நான் உன்னோடுடன் பிறந்த ஸஹோதரித்-தங்கையரும் நம்மளுட ஆலத்தூர் பட்டணத்தே. உங்களுட நாளையிலே நான் வெளிவாசல் கண்டறியேன்.

82, அண்ணா, நான் நாடு கடந்தறியேன். என் பணைப் பெருங்கி வில் வேந்தும் பாரச் சிலை ஸ்ரீராமா. நான் தங்காள் பிறவியரும் நம்மளுட சித்தாலப் பட்டணம் செம்ப பொன்னிவள நாடு சீமையிலே உங்களுட நாளையிலே நான் ஒரு கடைத் தெருவே போயறியேன்.

## தங்கை அண்ணன்மார்களைத் தேடப் புறப்படுதல்.

83, அண்ணா, நான் கூடலூர் என்று சொல்லி என் சிங்கத்தை வெட்டிப் பிளக்கும் சிறுபுலித்தார் வேந்தா நான் பத்தினியும் பெண்ணாளும் உங்களுட நாளையிலே அங்கு நீங்கள் ஒரு குறிப்பு சொல்லக் கேட்டிருப்பேன்.

84, அண்ணா, நான் கூடலூர் வீதியெங்கும் என் ஆணழகன் ஆணைமகா தார் வேந்தா, நான் பெண் பெருமாள் தேவியரும் உங்களிருவரையும் காணாமல் ஒரு குடிசை முதல் தேடுற்றேன்.

85, அண்ணா, நான் வீரப்பூர் என்று சொல்லி என் பொறுமை பொருந்த போர்க்களத்து ஸ்ரீராமா நான் தங்கை நல்லாள் பத்தினியும் உங்களுட நாளையிலே நான் ஒரு விபரஞ் சொல்ல கேட்டிருப்பேன்.

86, அண்ணா, நான் வீரப்பூர் வீதியிலே
பொல்லாத வனம் போன பாதகரே. நான் வெள்ளாங்-
குமாரத்தியும் என்பிறந்த [illegible] அண்ணர் இருவரையும்
காணாமல் அங்கு ஒரு வீதி மேதல் தேடயூற்றேன்.

87, அண்ணா, நான் வயசாறு என்று சொல்லி என்முடிபொருத்த
காரளா. நான் உன்னோடுடன் பிறந்த உத்தமியாள் பத்தினியும்
உங்களுட நாளையிலே அங்கு
ஒரு வார்த்தை சொல்ல கேட்டிருப்பேன்.

88, அண்ணா, நான் வயசாறு வீதியெங்கும் என்மகுடரத்ன
முடிவேந்தா. நான் வெள்ளாங்குமாரத்தியும் நம்மளுட
நாட்டிலே தான் உங்களிருவரையும் காணாமல் ஒரு
வளவு மேதல் தேடயூற்றேன்.

89, அண்ணா, என்ன மடியிலுரிசி கட்டி என் மனப்பிடுங்கி
வில்லேந்தும் பார்ச்சிறில வீரமா. ஆலத்தூர் பட்டணம்
||| AS அழகு பொன்னிவள நாடு சீமையிலே அண்ணனும் தம்பி
இருவரென்று பெருமைதான் என்னமங்காமல் பெண் வளர்த்தீர்.

90, அண்ணா, என்ன மங்காமல் பெண் வளர்த்து என்னோடுடன்
பிறந்த இளவயது காரளா. நம்மளுட கங்கை பொன்னிவளநாடு
சீமையிலே இப்போ என்ன வழியில் கவிழ்க்கிறீர்களே.

91, அண்ணா, என்ன வழியில் கவிழ்க்கநினைத்தல். என்
பொறுமை பொருத்த போர்க்களத்து வீரமா. நான்
உன்னோடுடன் பிறந்த உடன்தாரி தங்கையரும்
உங்களிருவரையும் காணாமல் இப்போ என் மடியுரிசி
சூறையென்றேன்.

92. அண்ணா, நீங்கள் என்னை சிறகிலெசி கட்டி என்
கோடையிடிக் காரனா. நம்மளுட சித்தாலப் பட்டணம்
செம்ப பொன்னி வளநாடு சீமையிலே அண்ணந் தம்பி
இருவரெண்டு பேருமேதான் என்ன சிந்தாமல் பெண்
வளர்த்தீர்.

93. அண்ணா, நீங்கள் என்ன சிந்தாமல் பெண் வளர்த்து
என் பணைப் பெருங்கி வில்லேந்தும் பார்ச்சிரு வீகாமா.
நம்மளுட வைய பொன்னி வளநாடு சீமையிலே இப்போ
என்னைத் தெருவில் கவிழ்த்தீர்களே.

94. அண்ணா, நீங்கள் என்னைத் தெருவில் கவிழ்த்ததனால்
பொல்லாத வனம் போன பாதகரே. நான் வெள்ளாங்-
குமாரத்தி விலைப்பட்டா மங்கையரும் உங்களிருவரையும்
காணாமல் இப்போ என் சிறகரிஞ்சி தறையெ மென்றேன்.

95. அண்ணா, நான் காட்டுக் கிளியானேன். பொரற் பெரிய
புகழ் பெரிய தார் வேந்தா. நான் பிறந்த அண்ணர்
இருவரையும் காணாமல் நம்மளுட நாட்டிலே தான்
இப்போ நான் கானகத்து மானானேன்.

96. அண்ணா, நான் கூட்டுக் கிளியானேன். என் மகுட ரத்னமுடி
வேந்தா. உன்னோடு உடன்பிறந்த உத்தமியாள் பத்தினியும்
உங்களிருவரையும் காணாமல்
ஒரு கொம்பொடிந்த மானானேன்.

97. அண்ணா, நான் ஒரு பட்டி மானிலே தான் பொல்லாத
வனம் போன பாதகரே. நான் பெண்ணாள் தனி ஒருத்தி
பேடை மயிலன்னம் பெண் பெருமாள் தேவியரும்
உங்களிருவரையும் காணாமல் இப்போ ஒரு
மான் தனிப் பிரிந்தேன்.

98, அண்ணே, நான் காயா மரமானேன். என் சிவ சிவா கர்த்தாவே.
நம்மளுட கங்கை பொன்னிவள நாடு சீமையிலே
நான் பத்தினியும் பெண்ணுளும் உங்கள் இருவரையும்
காணாமல் இப்போ நான் கன்றிழந்த பசுவானேன்.

99, ~~அண்ணே, நான் ஆடாத பரம்பரனேன். என் பொறுமை~~
~~நான் வெள்ளாங் குமாரத்தி~~

அண்ணே, நான் ஆடாத பரம்பரனேன். என் பொறுமை பொருந்த
போர்க்களந்து வீகாமா. நான் வெள்ளாங் குமாரத்தி விலைப்பட்ட
மங்கை நல்லாள். வைய பொன்னிவள நாடு சீமையிலே
உங்கள் இருவரையும் காணாமல் இப்போ
அடி முறிந்த செக்கானேன்

100, அண்ணே, நான் ஓடாத தேரானேன். என் பிணபிருங்கி வில்லேந்தும்
பார்த்திப வீகாமா, உன்னோடுடன் பிறந்த ஒஹோதரி தங்கையரும்
நம்மளுட கங்கை பொன்னிவள நாடு சீமையிலே, உங்களிருவரையும்
காணாமல் இப்போ உள் முறிந்த செக்கானேன்.

101, அண்ணே, நான் பட்டமரமானேன். பொல்லாத வனம் போன பாதகனே
நான் தங்காள் பாறவியும் நம்மளுட ஆலத்தூர் பட்டணத்தே
உங்கள் இருவரையும் காணாமல் இப்போ நான்
பாழூரில் செக்கானேன்.

102, அண்ணே, நான் உழுத்த மரமானேன். என் கோடையிடிக்காரனா.
நான் உன்னோடுடன் பிறந்த ஒஹோதரித் தங்கையரும்
உங்களிருவரையும் காணாமல் இப்போ நான்
உள் முறிந்த செக்கானேன்.

10௩, அண்ணே, நான் தண்ணித் தடாக்குளத்தான் சிங்கத்தை
வெட்டிப் பிளக்கும் திருபுலித்தார் வேந்தா. நான்
பத்தினியும் பெண்ணுளும் நம்மளுட சீமையிலே
உங்கள் இருவரையும் காணாமல் இப்போ நான்
தவழிந்த மானானேன்.

104, அண்ணே, நான் வெறுக்கத் தடத்திலேதான். என்னுடன்
பிறந்த இளவயது காளை. நான் கொள்ளாக்குமாரத்தி
இடிப்புகிறா மங்கையரும் உங்களிருவரையும் காணமல்
இப்போ நான் ~~ஒரு~~ வைகரி இழந்த மானுடனன்.

105, அண்ணே, எனக்கு நாகன் இடை பிடிக்கும். என் பொறுமை
பொருந்த போர்க்களத்து வீகாமா. பொல்லாத வேட்டுவனார்
எல்லையிலே என் குரலும் கேட்டாக்கால் எனக்கு
அங்கு ஒரு நற்பாம்பு வழிகாட்டும்.

106, அண்ணே, அங்கே வரமிடி மனம் முருகும். என் பேறாற் பெரிய
புகழ் பெரிய தார் வேந்தா. இந்த வீரமில்ல கானகத்தே
என் குரலும் கேட்டக்கால் அங்கு ஒரு மாகொடியாள்
நெருங்கும்.

107, அண்ணே, அங்கே இடிமிடி மனம் முருகும் என்னுடன்
பிறந்த இளவயது தார் வேந்தா. பொல்லாத வேட்டுவனார்
எல்லையிலே. இந்த உத்தமியாள் குரல் கேட்டால்
அங்கு ஒரு இளகாதை நெருங்கிளகும்.

108, அண்ணே. அங்கே கல்லும் மனம் முருகும். என் சின்னண்ணே.
காளை. பொல்லாத வேட்டுவனார் எல்லையிலே இந்த
உத்தமியாள் குரல் கேட்டால் ஒரு கலந்தாரி
நெருங்கும்.

(X) இந்த பாட்டையும் 124வது பாட்டைக்கொண்டு பாடவும்.
109, அண்ணே, நான் மயிலை விரித்த இருதேன். என்
சிங்கத்தை வெட்டிப்பிளக்கும் புலித் தார் வேந்தா.
பொல்லாத வேட்டுவனார் எல்லையிலே உங்கள்
இருவரையும் காணமல் இப்போ மார்கள் பிடித்திருக்க.

இசை, ✓ ⊗

(110) அண்ணா, நான் முடியை வெறித்து தேன். என் கனகரத்ன முடிவேந்தா. நான் தங்காள் பிறவியரும் உங்களிருவரையும் காணாமல் இந்த வீரமலைக் கானகத்திலே முட்கள் பிடித்திருக்க.

[redacted]

111, தங்காள் அண்ணன்மார் படுகளமாக, கிடப்பதைக் கண்டு புலம்பல்.

அண்ணா, உங்களுக்கு கல்லோ தலைகாணி என் பிணைப்பிருங்கி வில் லேந்தும் பார்ச்சிலே வீகாமா பொல்லாத வேட்டுவனார் சீமையிலே அண்ணன் தம்பி இருவரெண்டு பேருக்குமே தான் வீரமலை காணகமோ பஞ்சு மெத்தை.

112, அண்ணருக்கு புல்லோ தலைகாணி என் சிவ சிவா கர்த்தாவே. பொல்லாத வேட்டுவனார் எல்லையிலே அண்ணன் தம்பி இருவரெண்டு பேருமே தான் வீரமலைப் பூமியோ பஞ்சு மெத்தை.

113, அண்ணா, உங்களுட கத்திபடா மேனியிலே என் பிணைப்பிருங்கி வில் லேந்தும் பார்ச்சிலே வீகாமா. இப்போ வீரமலைக் கானகத்தே இவனும் சோங்கிலே தான். என் பிறந்த இருவ ரெண்டு பேருமே தான் காயம்பட்டு மாண்டீர்களோ?.

114, அண்ணருக்குத் தோளெல்லாம் குத்தாதோ. என் மகுட ரத்ன முடி வேந்தா. இந்த வீரமலைக் கானகத்திலே, இவனும் சோங்கிலே தான் அண்ணரிருவரெண்டு பேருக்குமே தான் இப்போ துணைகளெல்லாம் செங்காறு.

115, அண்ணருக்கு மார்பெல்லாம் குத்தாதோ. என்னோடுடன் பிறந்த இளவயது தாரட்டிகளே. பொல்லாத வேட்டுவனார் சீமையிலே என் பிறந்த அண்ணர் இருவரெண்டு பேருடைய மடிகளெல்லாம் செங்காறு.

116, அண்ணா, உங்களுட அம்புபடா மேனியிலே பொல்லாத வனம்
போன பாதகரே. பொல்லாத வேட்டுவனார் இமையிலே
அண்ணன் தம்பி இருவரெண்டு பேருமே தான்
அங்கு அம்புபட்டு மாண்டீர்களோ?

117, அண்ணா, நீங்க மண்டிவிட்ட காலோடே என்
சிங்கத்தை வெட்டிப் பிளக்கும் சிறுபுலித் தாக்கட்டிகரே.
இந்த வீரமலைக் கானகத்தே என்பிறந்த அண்ணார் இருவ-
ரெண்டு பேருமே தான் மற்போரு செய்தீர்களே.

118, அண்ணருடை செப்பழகும் பாவனையும் பொருமை பொருத்த
போர்க்களத்து வீராமா. நான் உன்னோடுடன் பிறந்த
உத்தமியும் பெண்ணாளும் உங்கள் இருவரெண்டு பேரையும்-
போல் இந்த உலகத்தே கண்டதில்லே.

119, அண்ணருடைய வடிவழகும் பாவனையும். என் முடி பொருத்த
காராளா. நான் வெள்ளாங்குமாரத்தியும். என் பிறந்த
அண்ணாதம்பி இருவரெண்டு பேரையும் தான்
இந்த வையகத்தே கண்டதில்லே.

120, அண்ணருக்கு அழகை எழுதினவன். என் சிவசிவா கர்த்தாவே.
அந்த ஆதிசிவன் கர்த்தாவும் ஐயபரமேஸ்வரரும் என்பிறந்த
அண்ணர் இருவரெண்டு பேருக்குமே தான்
அங்கு ஆயுள் எழுதலையே.

121, அண்ணா, உங்களுக்கு வடிவை எழுதினவன் என்- ~~பிறந்த~~
னோடுடன் பிறந்த இளவயது காராளா. பொல்லாத ஈஸ்வரனார்
அண்ணர் இருவரெண்டு பேருக்குமே தான் அங்கு
வாழ்நாள் எழுதலையே.

117 அ
அண்ணா சீமான் மற்போர் நடந்ததோ என் துணையாக துணையாக
வேண்டா. சொல்லாத வேட்டுவனார் இமையிலே என் பிறந்த அண்
ணர் இருவரெண்டு பேருமே தான அங்கு மாண்டு மடிந்தீர்களே.

122, அண்ணை, நான் அடித்து விழுந்தழுதேன். என் பேராற்
பெரிய புகழ் பெரிய தார்வேந்தா. நான் உன்னுடன்
பிறந்த உடகாரித் தங்கையரும் நீங்கள் பட்ட படுகளத்து
வாசலிலே இப்போ என் ஆபரணம் அற்று விழ.

123 அண்ணை, நான் கொதித்து விழுந்தழுதேன். என் பனைப்பெருங்கி
வில்லேந்தும் பார்த்திப வீகாமா. நான் கொள்ளாகுமாரத்தி
குடிப்புகுதா மங்கையரும் நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே
நான் குப்புற்றேன் பூமியிலே.

124, அண்ணை, நான் கட்டியழுதேனே. என் சின்னண்ணை,
தார் வேந்தா. நான் உன்னுடன் பிறந்த உத்தமியும்
தங்கை நல்லாள் நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே
அப்போ என் கனக மணியற்று விழ.

125, அண்ணை. நான் முட்டி அழுதேனே. என் பொறுமை பொருந்த
போர்க்களத்து வீகாமா. நான் வெள்ளாங் குமாரத்தி ~~ம~~
வேதித்த சந்தனமும் கொள்ளாக் குமாரத்தி குடிப்புகுதா
மங்கை நல்லாள் நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே
என் முத்து மணியற்று விழ.

126, அண்ணை, நான் என் சாந்தணியும் மேனியெல்லாம் என்
அண்ணலழகன் ஆணழகா தார் வேந்தா. நான் பெண்ணுள்
தனி யொருத்தி பேடை மயிலன்னம் பெண் பெருமான் ~~தேவியரும்~~
நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே. இப்போ நான்
சாணி துவண்டழுதேன்.

127, அண்ணை, நான் என் புனுகணியும் மேனியெல்லாம் சிங்கத்தை
வெட்டிப் பிளக்கும் சிறுபுலித் தார் வேந்தா. நான் உன்னுடெ
டன் பிறந்த உத்தமியும் தங்கை நல்லாள்

நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே இப்போ நான் புழுதி புரண்டுடேதேன்.

128. அண்ணை, நான் அழுத்துக் கொள்வேன் மார் மேலே. என்னுடன் பிறந்த இளவயது தம்பி சிங்கா. பொல்லாத வனம் போன பாதகனே நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே என் அங்கமெல்லாம் கொப்பளிக்க.

129. அண்ணை, நான் இத்துக் கொள்வேன் மார் மேலே பொல்லாத வனம் போனி பாதகனே. நான் பெண்ணுள் தனியொருத்தி பேடைமயிலன்னம் பெண் பெருமாள்தேவியரும். நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே கொங்கை ரெண்டும் கொப்பளிக்க.

⊗ 109 and 110 · பாட்டின் கண்ணையும் [illegible]

130. அண்ணை, நான் ஆனையிருக்கு தென்று என் முடி பொருந்த காராளா. நான் பத்தினியும் தங்கை நல்லாள் நம்மளுட சீமையிலே நான் அஞ்சேனுகுவனையும்.

131. இப்போ இந்த ஆனைப்படை போய் மடிய என் கனகரத்ன முடிவேந்தா. நான் பருவதா பத்தினியும் இந்தப் பொல்லாத வேட்டுவனார் சீமையிலே உத்தமியும் பெண்ணுளும் இப்போ அஞ்சிப் பயந்தேனண்ணை.

132. அண்ணை, நான் குதிரையிருக்கு தென்று என் கொற்றவரி மணிமார்பா. நம்மளுட தங்கை பொன்னிவள நாடுசீமையிலே நான் தங்காள் பிறவியரும் கூடசேனுருவனையும்.

133. அண்ணை, நம்மளுட குதிரைப்படை போய் மடிய என் பினப் ~~நான் [illegible]~~ பிருங்கி வில்லேந்தும் பார்க்கிலே வீகாமா. நான் வெள்ளாங் குமாரத்தி விலைப்படா மங்கையரும் பொல்லாத வேட்டுவனார் சீமையிலே நான் கூசிப் பயந்தேனண்ணை.

134, அண்ணா, நான் என் தங்க வளைக்கைகள் இரண்டும் என் சிவ சிவா கர்த்தாவே. நான் உன்னோடுடன் பிறந்த உத்தமியும் பெண்ணாளும் நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே. இப்போ என் நெஞ்சின்மேலே வைத்தழுதேன்.

135, அண்ணா, நான் என் முத்து வளைக்கைகள் இரண்டும் என் சிங்கத்துரை வெட்டிப்பிளக்கும் சிறுபுலித்தார் வேந்தா. நான் பருவதா பத்தினியும் நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே இப்போ என் முகத்தின்மேல் வைத்தழுதேன்.

136, அண்ணா, நான் என் மயிரை விரித்தழுதால். என் கோடையிடிக்காரர்களா. இந்த வீரமலைக் கானகத்தே ஐவனமும் சோங்கிலே தான் இந்தப் பத்தினியாள் குரல் கேட்டால் அங்கு வந்த மழை மின் தாங்கும்.

137, அண்ணா. நான் என் கூந்தல் விரித்தழுதால் பொல்லாத வனம் போன பாதகரே. இந்த வீரமலைக் கானகத்தே ஐவனமும் சோங்கிலே தான் இந்த உத்தமியாள் குரல் கேட்டால் அங்கு வரும் கோடை மழை பின் தாங்கும்.

138, அண்ணா, அங்கே காகம் பறவாது. என்னோடுடன் பிறந்த இளவயது தார்வேந்தா. நீங்கள் பட்ட படுகளத்-து வாசலிலே என் குரலுங் கேட்டாக்கால் அங்கு ஒரு கருக் குருவி நாடாது.

139, அண்ணா, அங்கே சிட்டெப்பறவாது. பொறுமை பொருந்த போர்க்களத்து வீகாமா. நீங்கள் பட்ட ~~படுகளத்து~~ படுகளத்து வாசலிலே என் குரலுங் கேட்டாக்கால்

உங்களை ஒரு சிறு கறையான் தீண்டாது.

140. அண்ணா, அங்கே காண்டா மிருகமது. என் சிவசிவா-
கர்த்தாவே. ஆதிசிவன் கர்த்தாவே. ஐயா, பரமேஷ்வரரே.
நீங்கள் பட்ட படுகளத்து வாசலிலே என் குரலுங் கேட்-
டாக்கால் உங்களை ஒரு கரடி புலி தீண்டாது.

141, அண்ணா. அங்கே ஐவாய் மிருகமது. என் பனைப் பிடுங்கி
வில் லெடுத்தும் பார்த்திடு வீகாமா. பொல்லாத வேட்டுவனார்
சீமையிலே என் குரலுங் கேட்டாக்கால் உங்களை ஒரு
ஆளி சிங்கம் தீண்டாது.

142, அண்ணா, நான் ஏந்திய கரகமது, என் சிவசிவா கர்த்தாவே
நான் உன்னோடுடன் பிறந்த உத்தமியாள் பத்தினியும்
இப்போ நான் ஏங்கிய கிழாயுடனே.

143, அண்ணா. நான் பசுங்கிளாய் கொண்டல்லவோ என் பொறுமை
பொருந்த போர்க்களத்து வீகாமா. நான் வெள்ளாளங்-
குமாரத்தியும் அந்த ஆதிசிவன் பக்கிலே உங்களை
எழுப்ப வரம் வாங்கி வந்தேன்.

144, அண்ணருக்கு அழகோ பதினாறு. என் மகுட ரத்ன
முடி வேந்தா. என்னோடுடன் பிறந்த அண்ணர் இருவ-
ரெண்டு பேருக்குமே தான் இப்போ ஆயுளோ
தொண்ணூறு.

145, அண்ணா, உங்களுக்கு வயதோ பதினாறு. என் பொறுமை
பொருந்த போர்க்களத்து வீகாமா. என் பிறந்த அண்ணரிரு
வரெண்டு பேருக்குமே தான் இப்போ வாழ்நாளோ
தொண்ணூறு.

146, அண்ணருக்கு அம்பு படவுமில்லை. என் பண்ப் பிருங்கி வில்-
லேந்தும் பார்ச்சிறு வீகாமா. இந்த வீரமலைக் கானகத்தே
ஐவனமும் சோங்கிலேதான் நீங்கள் பட்ட படைத்தலைவ
ரெல்லாருக்கும் அரைக்காயம் தைக்கவில்லை.

147, அண்ணருக்கு கத்தி படவுமில்லை. சிங்கத்தை வெட்டிப்
பிளக்கும் சிறு புலித்தார் வேந்தா. பொல்லாத வேட்டுவனூர்
எல்லையிலே நீங்கள் பட்ட படைத்தலைவ ரெல்லாருக்கும்
ஒருகால் காயம் தைக்கவில்லை.

148, அண்ணருக்கு கண்ணூறோ பொல்லாது. என் சிவசிவா
கர்த்தாவே. அந்த வீரமலைக் கானகத்தே ஐவனமும்
சோங்கிலேதான் என் குரலுங் கேட்டாக்கால் நீங்கள்
பட்ட படைத்தலைவ ரெல்லாரும் அப்போ கடுகி எழுந்திருங்கோ.

149, அண்ணருக்கு திட்டிகளோ பொல்லாது என்னுடன்
பிறந்த இளவயதுக் காளை. நீங்கள் பட்ட படைத்தலை
வரெல்லாரும் என் குரலுங் கேட்டாக்கால் அப்போ
நொருங்கிட்ட எழுந்திருங்கோ.

150, அண்ணரெழுந்திருந்தார். என் சிவசிவா கர்த்தாவே.
அந்த வீரமலைக் கானகத்தே ஐவனமும் சோங்கிலேதான்
உத்தமியாள் தன்னைப் பார்த்து ஆனந்தங் கொண்டாரே.

135.A. அன்று நான் என் பயணம் போர்க்கண்ணிலா. என் குழந்தைகள் குழ-
ந்தை தோட்டம். என் பொறுமை மனதுக்கு போர்க்களத்துடன் போல
இடப்பட்ட பகைமைக்குள்ளாகினேன். நான்காம் நாள் மடமடவென
கூப்பாடு போட்ட பக்கத்தில் ஓடோடினேன்.

135.B. அன்று என் வீட்டுப் போர் கண்ணீரால் ஒன்றே மகிழ்ச்சியை
கொண்டாடினோம். நான் பலவகை பக்தியுடன் இடப்பட்
ட பகைமை நீக்கி வாழ்ந்தேன். இப்போது நான் இங்கிருந்து
ஓடிவிட்டேன்.

14.A. அன்று நம்முடைய குரு சொன்னது என் தலைசாய்த்து கேட்டேன்
நம்முடைய இந்நாட்டுப்பட்டணம் சுற்றி சொல்லிவந்தார் இதையறிந்து
உடனடியாக நாளையே குரு ஒரு கதை சொல்லிவந்தார்.

14.B. அன்று நம்முடைய குறிக்கோளை என் தொண்டர்களிடம்
சொன்னேன். நம்முடைய குறிக்கப்பட்டணம் அழகு சொல்லி
வந்தார் இதையறிந்து உடனடியாக நாளையே அதனுடைய
சொல் இது.

14.C. அன்று நம்முடைய குறிக்கோளை என் சின்னஞ்சிறு காலம்
நம்முடைய வைய சொல்லி வந்தார் இதையறிந்து உடனடியாக
நாளையே அது கொண்டாடும் நாள் இது.